# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **192/2015**

ஆணை எண். **191/2016**

நாள் : **03/12/2016**

**திரு. ஆர். சின்னதுரை,**
**புளியங்காடு,**
**திருப்பூர் மாவட்டம்.** — **முறையீட்டு மனுதாரர்**

**மாநகராட்சி ஆணையர்,**
**திருப்பூர் மாநகராட்சி,**
**திருப்பூர்.** — **எதிர் மனுதாரர்**

திருப்பூர் மாவட்டம், வீரபாண்டி வட்டம், புளியங்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு ஆர். சின்னதுரை அவர்களின் 26.08.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.08.2015 அன்று பெறப்பட்டு 192/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருப்பூர் மாவட்டம், வீரபாண்டி வட்டம், புளியங்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு ஆர். சின்னதுரை அவர்கள், தனது 26.08.2015 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருப்பூர் மாநகராட்சி பழைய பேருந்து வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். தனது முறையீட்டு மனுவில் பயணிகள் அமர்வதற்காக வாங்கியுள்ளதாக கூறிய 280 சேர்களில் 141 சேர்கள் மட்டுமே உள்ளதாகவும், தார்ச்சாலைகளுக்கு பதிலாக காங்கிரீட் தளம் அமைத்ததில் முறைகேடுகள் நடந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இயற்கை நீரூற்று அமைத்தது, தூண்களுக்கு டைல்ஸ் பதித்தது, மாற்றுத் திறனாளிகளுக்கு கழிவறை கட்டியது முதலிய பணிகளிலும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் மனுகுறித்து விளக்க அறிக்கை இம்முறைமன்ற நடுவ 31.08.2015 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டு, அவ்வறிக்கை ந.க.எண்.420/சி.1/நம/ 2015, தேதி10.06.2016 மூலம், இம்முறைமன்ற நடுவத்தில் 21.06.2016—ல் பெறப்பட்டது.

3. மேற்படி புகார்கள் குறித்து 21.03.2016 மற்றும் 14.10.2016 ஆகிய நாட்களில் மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் காங்கிரீட் தளம் தரமாக அமைக்கப்படவில்லை என்றும் செயற்கை நீரூற்று அமைக்க ரூபாய் இரண்டு இலட்சம் மட்டுமே செலவு ஆகியிருக்குமென்றும், தூண்களில் பதிக்கப்பட்ட டைல்ஸ்கள் அனைத்தும் சில நாட்களிலேயே உதிர்ந்துவிட்டன என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும் செயற்கை நீரூற்று பணியை மேற்கொண்ட திரு ரெட்டி என்பவருக்கு முழுப்பணமும் கொடுக்கப்படவில்லை என்றும், இதரப்பணிகள் மேற்கொண்ட பிற ஒப்பந்ததாரர்களுக்கும் பணம் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். செயற்கை நீரூற்றுப்பணியை மேற்கொண்டவர் திரு ரெட்டி என்பவர் என்றும் ஆனால் ஒப்பந்தப் பணி திரு அழகர் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பயணிகள் அமரக்கூடிய இருக்கைகளின் விலை ரூ.15,500/— என்றும் ஆனால் மாநகராட்சி பட்டியலில் ரூ. 16,500/— எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மாநகராட்சி ஆணையர் குறிப்பிட்டபடி மூன்று இலவசக் கழிப்பறைகள் இல்லை என்றும், புதிதாக கட்டணக் கழிப்பிடம் ஒன்று கட்டப்படுவதாகவும் தெரிவித்தார். மேலும் ரூபாய் 3.5 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்ட காங்கிரீட் தளம் 6 மாதத்தில் பழுதடைந்து விட்டது என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

4. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. பேருந்துநிலைய பயன்பாட்டிற்காக 280 எண்ணிக்கை சேர்கள் பொருத்த பணி உத்தரவு வழங்கப்பட்டதில், 180 எண்ணிக்கை சேர்கள் மட்டுமே பொருத்தப்பட்டன என்றும், இதற்கான தொகை மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். சமூகவிரோதிகளால் சேதப்படுத்தப்பட்ட 33 சேர்கள் கிடங்கில் வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். 10,935 சதுரஅடி பரப்பில் அமைக்கப்பட்ட புது காங்கிரீட் சாலை தற்போதுவரை தரமாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். செயற்கை நீரூற்று அமைக்க ரூ.6.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணியளவுகளின்படி ரூ.6.51 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் பழைய பேருந்துநிலையத்தில் உள்ள தூண்களில் பக்கவாட்டில் இருபுறமும் டைல்ஸ் பதிப்பதற்கு ரூ.17.25 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டதென்றும், ஆனால் மேற்கொள்ளப்பட்ட பணிக்கு ரூ.12.61 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறைகள் சீரமைப்பதற்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பேருந்துநிலைய முகப்பு நுழைவாயில் குறுகலாக இருந்ததால், விபத்துகளை தவிர்க்கும்பொருட்டு காவல்துறை அதிகாரிகளின் அறிவுரைகளின்படி முகப்பில் இருந்த சுற்றுச்சுவர் அகற்றப்பட்டு போக்குவரத்துக்கு உகந்தவகையில் மாற்றிஅமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து நல்லூர் மண்டல உதவி ஆணையர் திரு சி. கண்ணன் அவர்கள் 16.11.2016 அன்று நடைபெற்ற விசாரணைக்கு வருகை தந்து உரிய வாக்குமூலம் அளித்தார். விசாரணையின்போது முறையிட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள மூன்று நபர்கள் அமரக்கூடிய ஒரு சேரின் எடை 30 கிலோ என்றும் ஆனால் மாநகராட்சியால் பொருத்தப்பட்ட அதே அளவுள்ள ஒரு சேரின் எடை32 கிலோ என்றும் தெரிவித்தார். மேலும் எடை மற்றும் வடிவமைப்பில் வித்தியாசம் உள்ளதால் விலை வித்தியாசம் உள்ளதென்றும் தெரிவித்தார். விசாரணையின்போது எடைமேடையில் வழங்கிய இரசீதுகளையும் தாக்கல் செய்தார். இவ்விருக்கைகளை தரைத்தளத்தில் பொருத்துவதற்கு கூடுதலாக ரூ.1000/– செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். ஆனால் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இருக்கையின் தரம் குறித்த விவரம் எதுவும் அவரால் குறிப்பிடவில்லை எனக் குறிப்பிட்டார். செயற்கை நீரூற்று அமைப்பதற்கு திரு வி.பி. அழகையன் என்பவருக்குதான் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது என்றும், திரு ரெட்டி என்பவருக்கு அல்ல என குறிப்பிட்டு, திரு வி.பி.அழகையன் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தப் பணிஉத்திரவு நகலினையும் சமர்ப்பித்தார். மூன்று கழிவறைகளில் பழுதடைந்த ஒரு கழிவறை இடிக்கப்பட்டு தூய்மை பாரத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளது என்றும் அது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு 25.11.2016 முதல் அர்ப்பணிக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். பேருந்துநிலையம் நல்ல நிலையில் இருப்பதாகவும், தினமும் சுமார் 500 பேருந்துகள் மற்றும் 23 சிற்றுந்துகள் வந்து செல்வதாகவும் தெரிவித்ததுடன் 14.11.2016 அன்று எடுத்த பேருந்து நிலையத்தின் பலவகையான புகைப்படங்களையும் விசாரணையின்போது சமர்ப்பித்தார். பேருந்து நிலையச் சாலை பழுதடைந்திருந்ததால் விபத்துகள் ஏற்பட்டன என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளதை மறுத்து அதற்கு ஆதாரமாக விபத்துகள் ஏதும் நடக்கவில்லை என சம்பந்தப்பட்ட காவல் நிலைய ஆய்வாளர் அளித்துள்ள சான்றினையும் சமர்ப்பித்தார். மனுதாரர் கடந்த காலத்தில் பேருந்து நிலையத்தில் அனுமதியின்றி வைத்திருந்த பெட்டிக்கடையை அப்புறப்படுத்தியதாலும், அவருக்கு ஆவின் பூத் அமைக்க அனுமதி வழங்காததாலும் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே இதுபோன்ற ஆதாரமற்ற புகார்களை மனுதாரர் தெரிவித்துள்ளார் என விசாரணையின் போது தெரிவித்தார். மேலும் மனுதாரர் கறைபடிந்த கரங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

6. செயற்கை நீரூற்று அமைக்கும் பணியினை ஆந்திராவை சேர்ந்த திரு ரெட்டி என்பவர் மேற்கொண்டதாகவும், அவருக்கு ரூ. 80,000/– மட்டுமே வழங்கியதாகவும் மீதிப்பணம் வழங்கப்படவில்லையென விசாரணையின்போது மனுதாரர் தெரிவித்தார். பணியினை மேற்கொண்ட திரு ரெட்டி. அவர்கள் இதுகுறித்து எந்தவிதமான புகாரும் அளிக்காத நிலையில் மனுதாரர் எதனடிப்படையில் இப்புகாரை தெரிவித்துள்ளார் என்று தெரியவில்லை. திருப்பூர் ஒரு தொழில் நகரம். இந்நகரத்திற்கு இந்தியாவின் பல்வேறு மாநிலத்தவரும் பணிநிமித்தமாக வந்து செல்கின்றனர். பொதுவாக அரசு மற்றும் மாநகராட்சி சொத்துகளை எவ்வாறு பராமரிப்பது என எவரும் உணர்வதில்லை. பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறைகள் மற்றும் இருக்கைகளை தங்களது உடைமையெனக் கருதி பராமரிக்கப்படாத வரை, பொதுச்சொத்துக்கள் சேதப்படுத்துவதும், திருடப்படுவதும் தவிர்க்க இயலாது. மனுதாரர் கடந்த காலத்தில் பேருந்து நிலையத்தில் அனுமதியின்றி நடத்தி வந்த பெட்டிக்கடை பேருந்து நிலையத்தின் விரிவாக்கத்தின்போது அகற்றப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

/4/

மேலும் ஆவின் பால் பூத் வைப்பதற்கும் மனுதாரர் முயற்சி செய்துள்ளார். மாநகராட்சி அனுமதி மறுத்துள்ளது. எனவே, மனுதாரர் எவ்வித ஏற்கக்கூடிய ஆதாரங்கள் ஏதும் சமர்ப்பிக்காத நிலையில் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக மாநகராட்சி அலுவலர்கள் மீது புகார்கள் தெரிவித்துள்ளாரென முடிவுக்கு வரநேரிடுகிறது. பேருந்து நிலையம், அங்கு அமைக்கப்பட்டுள்ள இருக்கைகள் மற்றும் கழிப்பறைகளின் தற்போதைய புகைப்படங்களை உற்று நோக்குகையில் மனுதாரர் புகார் ஏற்புடையதாக இல்லை. மேலும், திருப்பூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, விசாரணையின்போது பெறப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரரின் முறையீடுகள் ஆதாரமற்றதாக உள்ளதாக முடிவு செய்யப்படுகிறது. எனவே, மாநகராட்சி அலுவலர்கள் மீதான ஆதாரமற்ற புகார்களை தவிர்க்குமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் எதிர்காலத்தில் மாநகராட்சி அலுவலர்கள் மாநகராட்சி சொத்துக்கள் திருடு போவது இயல்பு எனக்கருதாமல் உரிய தொடர்நடவடிக்கைகளை மேற்கொண்டு மாநகராட்சி சொத்துக்களை முறையாக பாதுகாக்கவேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

**2016** ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் **3**- ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

**திரு. ஆர். சின்னத்துரை,**
**2 /704, சங்கர் மீனா இல்லம்,புளிங்காடு,**
**வீரபாண்டி வட்டம்,திருப்பூர்.**

**ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி,திருப்பூர்.**

**உதவி ஆணையர்,**
**நல்லூர் மண்டலம்,**
**திருப்பூர் மாநகராட்சி,திருப்பூர்.**

/உண்மை நகல்/

செயலாளருக்காக.